


மேனாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் 94 ஆம் ஆண்டு பிறந்தநாள் மற்றும் உலக மாணவர்கள் தினத்தை முன்னிட்டு நேற்று (15–10–2025) சைதாப்பேட்டை அன்னை வேளாங்கண்ணி கலைக் கல்லூரி வளாகத்தில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மாபெரும் இளைஞர்கள் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கருத்தரங்க நிகழ்ச்சியில் ‘இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியா? ஆச்சரியக்குறியா!’ எனும் தலைப்பில் மேனனாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் மேனாள் ஆலோசகர் மற்றும் இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி இளைஞர்களுக்கு சிறப்பான ஒரு வழிகாட்டுதல் உரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் பொது கருத்துறையை – ‘இன்றைய தமிழ்நாடு’ எனும் பொருளில் இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் மு. துரைபாண்டியன் ஆற்றினார்.




தலைமைச் செயலகத்தில் (14.10.2025) அன்று மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கடந்த 05.09.2024 அன்று வடக்கு சிக்கிமில் உள்ள ரோங்லி சூவில் OP SNOW LEOPARDல் படைப்பணியின் போது மரணமடைந்த தமிழ்நாட்டைச் சார்ந்த இளநிலை படை அலுவலர் கே.தங்கபாண்டி என்பவரின் மனைவி வளர்மதி அவர்களிடம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூபாய் 40 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், கூடுதல் செயலாளர் கி.பாலசுப்ரமணியம், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 238 வது நாள்!

### வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, அக்.16-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 238 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (15.10.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 94 ஆ, ராஜமங்களம், ரெட் ஹில்ஸ் ரோடு, 2) வட்டம் 94 அ, பலராமபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் \ இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே. எஸ்.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### இந்தியத் துணைத் தூதர் திறந்து வைத்தார்!

# ஜெர்மன் - பிராங்க்ஃபர்ட் நகரில் சென்னைப் புத்தகத் திருவிழா அரங்கு!

### பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்திரமோகன் - அலுவலர்கள் பங்கேற்பு!

பிராங்க்ஃபர்ட், அக். 16-

ஜெர்மனியின் பிராங்க்ஃபர்ட் நகரில் புதன்கிழமை (15.10.2025) அன்று தொடங்கிய 77ஆவது பிராங்ஃபர்ட் புத்தகத் திருவிழாவில் சென்னைப் புத்தகத் திருவிழாவின் அரங்கு, இந்தியத் துணைத் தூதர் (பிராங்ஃபர்ட்) திருமிகு சுசிதா கிஷோர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது. 15.10.2025 முதல் 19.10.2025 வரை நடைபெறும் பிராங்ஃபர்ட் புத்தகத் திருவிழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் 10 பேர் கொண்ட குழு பங்கேற்கிறது.



இந்தத் தொடக்க விழாவில் தமிழின் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 சிறுகதைகள் கொண்ட நூல் MEERESWELLEN UND ANDERE GESCHICHTEN (கடல் அலைகள் மற்றும் பிற கதைகள்) என்னும் தலைப்பில் ஜெர்மன் மொழியில் வெளியிடப் பட்டது. திரவுபதி வெர்லாக் என்ற ஜெர்மன் பதிப்பு நிறுவனம் இந்த நூலை வெளிக்கொண்டு வந்துள்ளது. முனைவர் கு. அரசேந்திரன் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்ட தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் பொது முன்னுரை மற்றும் முதல் தொகுதி நூல்கள் அறிமுகம் செய்துவைக்கப் பட்டன. இதனை அறிமுகம் செய்யும் படக்காட்சியும் திரையிடப்பட்டது. இந்தத் தொகுதிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்பகம் ஆகியவற்றால் கூட்டு வெளியீடாகக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் மரு.பி. சந்திரமோகன், நிதித்துறையின் சிறப்புச் செயலாளர் ஜி.கே. அருண் சுந்தர் தயாளன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மைய முதல்வர் முனைவர் தே.ச. சரவணன், திரவுபதி வெர்லாக் பதிப்பகத்தின் இயக்குநர் திரு. கிறிஸ்டியன் வெய்ஸ், தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு.அரசேந்திரன், தமிழ்ப் பதிப்பாளர்கள், பிராங்ஃபர்ட் தமிழ்ச்சங்கம் உட்பட ஜெர்மனியின் பல தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர்கள்இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.


